1981 ஜனவரி 28]

திரு. சி. கோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஆதிதிராவிடர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற நிலம் நான்கு புறமும் அளந்து கொடுக்கப்படுகின்றதா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான்குபுறமும் அளந்துதான் கொடுக்கப்படுகின்றது. உட்காருங்கள்.

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் இப்படிப்பட்ட எந்தவிதமான புகார்களும் தனக்கு வரவில்லை என்று சொல்கிறார்கள். தென்னாற்காடு மாவட்டத்திலே சிதம்பரம் தாலுக்கா, விருத்தாசலம் தாலுக்கா, கடலூர், குறிஞ்சிப்பாடி, காட்டுமன்னார்கோயில் போன்ற இடங்களில் பத்தாண்டு காலத்திற்கு முன்பே பட்டா கொடுக்கப்பட்டும் அந்த இடங்களை அளந்து கொடுக்காத காரணத்தினால் முன்சீப் கோர்ட்டிலே கேஸ் நடந்து கொண்டிருக்கின்றது. மாண்புமிகு அமைச்சரவர்களுக்கு அங்குள்ள மக்கள் எல்லாம் விண்ணப்பம் எழுதி அனுப்பி இருக்கிறார்கள். அதனுடைய நகல் எனக்கு வந்திருக்கின்றது. அதன் மீது அமைச்சரவர்கள் என்ன நடவடிக்கை எடுத்தார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இதுபற்றி தனிக்கேள்வி போட்டால் பதிலளிக்க வசதியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடலோரப் பகுதி மீனவர் குடியிருப்புப் பகுதிகளுக்கு மின் இணைப்பு.

வினா எண் 61— திரு. கெ. சொக்கலிங்கம்: மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மீனவர்கள் குடியிருக்கும் பகுதிகளில் ஒயர் கம்பிகள் உப்பு காற்றினால் அறுந்து விளக்குகள் சரிவர எரியவில்லை என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், மேலே இருக்கும் ஒயரை பூமிக்கு அடியில் மாற்றி அமைக்கப்படும் உத்தேசம் அரசிடம் உண்டா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) கடற்கரையை ஒட்டிய பகுதிகளில் கம்பிகள் பாதிக்கப்படுவது உண்மைதான், ஆனால், தகுந்த பராமரிப்பு நடவடிக்கைகள் மூலம் பழுதுகள் அவ்வப்போது சரி செய்யப்படுவதால் விளக்குகள் எரிவதை அதிகமாகப் பாதிப்பதில்லை.

(ஆ) இல்லை.

திரு. கெ. சொக்கலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவவர்களே, கடற்கரைப் பகுதிகளில் மீனவர்கள் குடியிருக்கும் பகுதிகளில் குறிப்பாக திருவான்மியூரிலிருந்து மகாபலிபுரம் வரையில் உள்ள பகுதிகளில் உள்ள மின் விளக்குகள் எப்போதுமே எரியாமல் இருக்கின்றது என்று சொல்கிறார்கள். நான் சென்ற வாரம் கூட அங்கு சென்று சுற்றுப்பயணம் செய்யும்போது அங்குள்ள நிலைமையைப் பார்த்தேன். கடற் காற்றினால் புதிதாகக் கம்பி பொருத்தினால்கூட அது அறுந்து விடுகின்றது. ஒரு மாத காலம் கூட அந்தக் கம்பி இருப்பதில்லை. ஆகவே இந்த நிலைமையைப் போக்குவதற்காக அன்டர் கிரவுன்ட் என்ற முறையில் அதாவது பூமிக்கு அடியிலே கம்பிகளை அமைத்தால் பாதுகாப்பாக இருக்கும். விளக்குகள் எரிவதற்கும் வசதியாக இருக்கும். ஆகவே அவ்வாறு பூமிக்கடியிலே பதிப்பதற்கு ஆவன செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவரவர்களே, கடலோரப் பகுதிகளில் உப்புக் காற்றின் ஈரப்பசை இத்தகைய நிலைமையை உருவாக்குகிறது. எனவே வெறும் அலுமினிய கம்பிகளை பொருத்துவதற்குப் பதிலாக இரும்புக் கம்பியோடு சேர்ந்த அலுமினியக் கம்பிகளை பொருத்தவேண்டும் என்ற வகையில் மின் வாரியம் நடவடிக்கை எடுத்து வருகின்றது. மேலும் பூமிக்கடியில் கம்பிகளை அமைப்பது என்றால் ஏராளமாக செலவாகும். அதனை மின் வாரியத்தால் ஏற்றுக்கொள்ள இயலாது. எனவே இரும்புக் கம்பிகளோடு சேர்ந்த அலுமினிய கம்பிகள் நிச்சயமாக இந்த குறையைப் போக்கும் என்று நம்புகிறேன்.

திரு. து. புருஷோத்தமன்: பேரவைத் தலைவரவர்களே, உப்புக் காற்று படியாத கம்பிகள் பொருத்தப்பட்டிருக்கின்ற நம்முடைய சென்னை மாநகரிலே சைதாப்பேட்டையிலே விளக்குகள் பெரும்பாலும் எரிவது இல்லை என்பது அமைச்சரவர்களுக்குத் தெரியுமா? ஆகவே அங்கே இரும்பு கலந்த அலுமினியக் கம்பிகளைப் போடுவதற்கு அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, எனக்குத் தெரியாது.

தூத்துக்குடி அனல் மின் திட்டத்தில் வேலை வாய்ப்புகள்.

*வினா எண் 62—திரு. ரா. கிருஷ்ணன்: மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) தூத்துக்குடி அனல் மின்சாரப் பிரிவில் புதியதாக பணிக்கு ஆட்கள் தேர்ந்தெடுக்கப்பட உள்ளார்களா? எத்தனை பேர்கள்?